இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
ශ්‍රී ලංකා නීති ආධාර කොමිෂන් සභාව
LEGAL AID COMMISSION OF SRI LANKA

# சட்ட உதவி ஆணைக்குழு






**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**

இல. 129, உயர் நீதிமன்றத் தொகுதி,
ஹல்ப்ட்ஸ்டார்ப் வீதி, கொழும்பு 12.

011 2433618

legalaidcommission1978@gmail.com

www.legalaid.gov.lk

இலங்கையின் பொதுவான சட்டத்தின் கீழ், பராமரிப்பு தொடர்பான சட்ட ஏற்பாடுகளை 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம் உள்ளடக்கியுள்ளது.

செல்லுபடியான திருமணத்தினுள், ஒரு தரப்பு மற்றைய தரப்பு மற்றும் பிள்ளைகளுக்கு (சட்ட ரீதியான பிள்ளைகளாயினும் இல்லாவிடினும்) அவர்களின் பேணுகைக்கு போதியளவு நிதியியல் வசதிகளை வழங்காத நிலையில் அவ்வாறு வழங்குவதற்கு கட்டளையிடப்படும் எந்தவொரு பணக்கொடுப்பனவும் பராமரிப்பு என அழைக்கப்படுகின்றது.

## சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், பராமரிப்புப் பணத்தைக் கோருவதற்கு உரிமையுள்ளோர் யார்?



**செல்லுபடியான திருமணமொன்றில் உள்ள இரு தரப்புகளில் எந்தவொரு தரப்பும்.**




**18 வயதுக்கு குறைவான பிள்ளைகள்.**



**18 - 25 வயதுப் பிரிவில் உள்ள தம்மைத் தாமே பராமரிக்க முடியாத பிள்ளைகள்.**



**இயலாமை கொண்ட பிள்ளைகள் (உடலியல் அல்லது உளவியல் ரீதியாக) தமது வாழ்நாள் முழுவதும் பராமரிப்புப் பணத்தைக் கோரலாம்.**



**மேற்குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளில் உள்ள சட்டரீதியற்ற பிள்ளைகள் மற்றும் சட்டரீதியாக தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள் தமது தந்தை அல்லது/ அத்துடன் தாயிடம் இருந்து பராமரிப்புப் பணம் கோருவதற்கு உரித்துடையவர்கள்.**

**பராமரிப்பு விண்ணப்பப் படிவம் ஒன்றை ஏற்பதற்கு நியாயாதிக்கம் உள்ள நீதிமன்றம் எது?**

- விண்ணப்பதாரி வசிக்கும் பிரதேசத்தில் உள்ள நீதவான் நீதிமன்றம்.
- 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் சார்பாக ஒருவர் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பதாரி வசிக்கும் பிரதேசம்.
- எந்தவொரு நபருக்கும் எதிராக விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டால், அவன்/ அவள் (எதிராளி) வசிக்கும் பிரதேசம்.



## பராமரிப்புக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க உரித்துடையவர் யார்?

18 வயதுக்கு குறைந்த பிள்ளையின் சார்பாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமாயின், அப்பிள்ளையைக் கவனிக்கும் நபர்.

அதே போன்று, இயலாமை கொண்ட பிள்ளையொன்றின் (உடலியல் அல்லது உளவியல் ரீதியாக) சார்பாக விண்ணப்பம் மேற்கொள்ளப்படுமாயின், அப்பிள்ளையினைக் கவனிக்கும் நபர்.

அவ்வாறான பிள்ளை 18 – 25 வயதுப்பிரிவில் காணப்படினும் அப்பிள்ளைக்காக பராமரிப்பு கோரப்படலாம்.

அதே போன்று, சட்டரீதியாக திருமணம் செய்த கணவன் அல்லது மனைவி ஆகிய இருவரும் தம்மைப் பராமரிக்க முடியாத நிலையில் காணப்பட்டால் அவர்களில் ஒருவர் மற்றவருக்கு எதிராக அல்லது பிள்ளைகளுக்கு எதிராக பராமரிப்பு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

சட்டரீதியற்ற பிள்ளை ஒன்று தனது தந்தையிடம் இருந்து பராமரிப்பைக் கோர முடியும். எவ்வாறாயினும், பராமரிப்புக் கட்டளை வழங்கப்படுவதற்கு முன்னர் தந்தை நிலை மறுக்கப்பட்டால், தந்தை நிலை சான்றுகள் அல்லது DNA சோதனை மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். அது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டால், சாதாரண வழியில் பராமரிப்பைக் கோர முடியும்.

பெற்றோர்கள் பிரிந்துள்ள நிலையில், அவர்கள் பிள்ளையின் பராமரிப்புக்கு பொறுப்பானவர்களாகும். பிள்ளைக்கு பொறுப்பாக தாய் அல்லது தந்தை அல்லது பெற்றோர் அல்லாத வேறு எந்த நபரும் காணப்படும் நிலையில், இரண்டு பெற்றோருக்கும் போதிய வருமானம் இருக்குமாயின், அவர்கள் பிள்ளையின் பராமரிப்புக்கு பொறுப்பானவர்களாகும்.

## நீதவான் நீதிமன்றம் ஒன்றுக்கான பராமரிப்பு விண்ணப்பத்தில் வழங்கப்பட வேண்டிய தகவல்கள் எவை?

1. விண்ணப்பதாரியால் அவனை/ அவளை பராமரிக்க முடியாது என்ற விடயம்.

2. எதிர்வாதியின் வருமான மட்டம் (விண்ணப்பம் நபர் ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருப்பின் அந்நபரின் வருமான மட்டம்).

3. கணவனும் மனைவியும் பரஸ்பர ஒப்புதலின் பேரில் பிரிந்திருந்து அவர்களில் ஒரு தரப்பு வேறொருவருடன் வாழ்ந்து வந்தால் அத்தரப்பிடம் இருந்து மற்றைய தரப்பு பராமரிப்புப் பணத்தைக் கோர முடியாது. எவ்வாறாயினும் ஒரு தரப்பு விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்துள்ள நிலையில் மற்றைய தரப்பு பராமரிப்பு விண்ணப்பம் ஒன்றை மேற்கொண்டிருந்தால், விவாகரத்து வழக்கின் தீர்ப்பு வரும் வரை பராமரிப்புப் பணம் கோரப்படலாம்.

## பராமரிப்பு செயன்முறை எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது?

பராமரிப்புக்காக வழங்கப்படும் தொகை நபருக்கு நபர் வேறுபடுகின்றது. எந்த ஒரு நபரிடம் இருந்து பராமரிப்பு பணம் கோரப்பட்டால், அவனது/ அவளது மாதாந்த வருமானம் அதே போன்று அத்தரப்பின் பொருளாதார மற்றும் சமூக நிலைகள் கருத்திற்கொள்ளப்படும். பராமரிப்புப் பணம் கோரி நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் விண்ணப்பதாரியினால் வழங்கப்படும் சத்தியக் கடதாசியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நீதவான் நீதிமன்றுக்கு பராமரிப்புப் பணத்துக்கான விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் நீதிமன்றம் பணம் வழங்குமாறு கட்டளையிட்டால், எதிராளி கொடுப்பனவுகள் ஒழுங்காக வழங்கப்படுவதன் அடிப்படையில் அப்பணத்தை விண்ணப்பதாரியின் வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடுவதற்கு அல்லது அதனை தபால் மூலம் அனுப்புவதற்கு அனுமதிக்குமாறு கோரி நீதவானுக்கு விண்ணப்பிக்கலாம்.

பராமரிப்புப் பணம் வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கட்டளை ஒன்று மீறப்படும் போது அவ்வாறு பணம் வழங்காத தவணைகளுக்கு சமமான எண்ணிக்கை கொண்ட மாதங்களுக்கு அல்லது அதற்கேற்ற பகுதிக் காலத்துக்கு குறித்த நபருக்கு சாதாரண சிறைத்தண்டனை வழங்குவதற்கு நீதவான் அதிகாரமளிக்கப்பட்டவராகக் காணப்படுகின்றார்.

குறித்த காலப்பகுதி ஒன்றின் பின்னர், ஏற்கனவே அமுலில் உள்ள பராமரிப்பு பணம் வழங்கல் கட்டளையில் உள்ள தொகையை அதிகரிக்குமாறு நீதவானுக்கு விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிக்கப்பட முடியும்.

முஸ்லிம் பிள்ளையின் சார்பாக அல்லது அவ்வாறான தரப்பினால் இஸ்லாமியக் கொள்கைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் பராமரிப்புப் பணத்துக்கான விண்ணப்பம் ஒன்றில், அவ்வாறான விண்ணப்பம் ஒன்றை தொடர்புடைய பிரதேசத்தில் அமைந்துள்ள காதி நீதிமன்றம் ஒன்றில் மேற்கொள்வதற்கு, தாய், தந்தை அல்லது பிள்ளையின் பாதுகாவலர் அல்லது திருமணம் செய்த தரப்பொன்று உரித்துடையவர்களாகும். காதி நீதிமன்றம் ஒன்று பராமரிப்புப் பணம் வழங்குமாறு விதித்த கட்டளை ஒன்றின் பின்னர் எதிராளி பராமரிப்புப் பணத்தை செலுத்துவதற்கு தவறுவாராயின், அவ்வாறான கட்டளை ஒன்று பிரதேசத்தில் அமைந்துள்ள நீதவான் நீதிமன்றுக்கு மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் ஒன்றின் மூலம் செயற்படுத்தப்பட முடியும்.

குடும்பமொன்றாக, அதன் உறுப்பினர்கள் ஏனையோரின் மரியாதையைப் பேண வேண்டிய தேவை உள்ளதுடன் பிள்ளை ஒன்றை முறையாகப் பராமரிப்பது பெற்றோரின் பொறுப்பாகும்.

சட்ட உதவி ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள தனது கிளை வலையமைப்பின் ஊடாக தமது பிள்ளைகளைப் பராமரிப்பதைப் புறக்கணிக்கும் பெற்றோருக்கு எதிராக பராமரிப்பு வழக்குகளை தாக்கல் செய்வதற்கு உதவுகின்றது. அவ்வாறான விடயங்களுக்கான இலவச சட்ட அறிவுரை மேற்குறிப்பிடப்பட்ட கிளை அலுவலகங்களால் வழங்கப்படுகின்றது.

USAID
FROM THE AMERICAN PEOPLE


**பொறுப்புத் துறப்பு**

"இவ்வெளியீடு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் (USAID) ஊடாக அமெரிக்க மக்கள் வழங்கிய ஆதரவின் மூலம் சாத்தியமான விடயமாக அமைந்துள்ளது. இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் USAID அமைப்பின் அல்லது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் நோக்குகளை பிரதிபலிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை".